செ.வெ. எண்: 252 நாள்: 04.04.2012

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம்அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் சென்னையில் கூட்டுறவு சிறப்பங்காடி, கூட்டுறவு மருந்தகம் மற்றும் பத்து ரூபாய் கடை ஆகியவைகளை திறந்து வைத்தார்.**

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் சென்னையில் இன்று (4.4.2012) மாலை 4.00 மணியளவில் கூட்டுறவு சிறப்பங்காடி, கூட்டுறவு மருந்தகம் மற்றும் பத்து ரூபாய் கடைகளை திறந்து வைத்தார்கள்.

முன்னதாக, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், தலைமைச் செயலக அலுவலர்களின் காலணியில் TUCSன் சிறப்பங்காடியை திறந்து வைத்து, முதல் விற்பனையை துவக்கி வைத்தார்கள். பின்னர் திருவல்லிக்கேணி, பெரிய தெருவிலுள்ள TUCSன் தலைமை அலுவலகத்தில் கூட்டுறவு மருந்தகத்தினையும், 10/– ரூபாய் கடையினை திறந்து, விற்பனையை துவக்கி வைத்து பேசியதாவது.

TUCS என்று சுருக்கமாக அழைக்கப்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் 1904–ல் ஆரம்பிக்கப்பட்ட நமது தேசத்தின் முதல் கூட்டுறவு பண்டகசலையாகும். சென்னையில் 255 ரேஷன் கடைகளையும், 8 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்களையும், 12 பல்பொருள் சிறப்பங்காடிகளையும், 6 கூட்டுறவு மருந்தகங்களையும் (Pharmacy) 18 எரிவாயு (Indane Gas) கிளைகளையும் நடத்தி வருகின்றது. ஆண்டு வியாபாரம் 160 கோடிகளாகும்.

ஏழை, எளிய மக்கள் சுகாதாரமான முறையில் தரமான பொருட்களை பேக்கிங் செய்யப்பட்டு, குறைந்த விலையில் பெற்றிட வழி செய்யும் வகையில் திருவல்லிக்கேணி சூப்பர் மார்கெட் ஓர் முன்னோடியாக செயல்படும். இதன் மூலம் 100 ரூபாயைக் கொண்டு வீட்டிற்கு தேவையான 10 பொருட்களை வாங்க முடியும்.

இச்சிறப்பங்காடியில் பருப்பு வகைகள், எண்ணெய் வகைகள், கடுகு, மிளகு, சீரகம் வகைகள் போன்ற 80 வகையான தினசரி உபயோகிக்கும் மளிகைப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வரும் காலத்தில் மக்களின் தேவைக்கு ஏற்ப இந்த பொருட்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், அத்தியாவசியக் காய்கறிகளான தேங்காய், தக்காளி, வெங்காயம் போன்றவைகளையும் விற்பனைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சமையலுக்கு தேவையான மளிகைச் சாமான்கள், காய்கறிகளை தினசரி வாங்கும் பொதுமக்கள் மிகவும் பயன் பெறுவார்கள்.

மேலும், இக்கூட்டுறவுச் சங்கம் மூலம் மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் மருந்துகள், உயிர் காக்கும் மருந்துகளை பாதுகாப்பாக வைத்திருந்து, தகுதி பெற்ற மருந்தாளுநர்கள் மூலம் தள்ளுபடி விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு மருந்தகங்களில் பொதுமக்களுக்கு 15% வரை தள்ளுபடி செய்யப்பட்டு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவதால், தமிழ்நாட்டில் மருந்து விலைகள் கட்டுப்படுத்துவதுடன், தனியார் மருந்தகங்கள் கொள்ளை இலாபம் பெறுவதை கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் தனியார் மருந்தகங்களும் தள்ளுபடி விலையில் மருந்தகம் விற்பனை செய்யப்பட்டு வருவதால் பொதுமக்கள் அனைவரும் மிகவும் பயன்பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கடையில் ஆங்கில மருந்துகள் தவிர சித்தா, ஆயுர்வேத மற்றும் யுனானி மருந்துகளும், ஆர்கானிக் விளை பொருட்களும் கிடைத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் இணைப்பதிவாளர்/தனி அலுவலர் திரு.ஆர்.ஜி.சக்தி சரவணன், சங்கத்தின் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**